நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பட்டுக்கோட்டை.
முன்னிலை – திரு. த.சுதர்சன்.,எம்.ஏ.எல்.எல்.பி.,
நீதித்துறை நடுவர், பட்டுக்கோட்டை.
2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ம் நாள் புதன் கிழமை
**ஆண்டு பட்டிகை வழக்கு எண். 22/2026**

**CNR .No. TNTJ11-000047-2026**

அரசு சார்பாக காவல் உதவி ஆய்வாளர்,
மதுக்கூர் காவல் நிலையம்
குற்ற எண்.412/2025 .... குற்றமுறையிடுபவர்

/எதிர்/

1. சசிக்குமார் (வயது –48/2026 )
த/பெ. சிதம்பரம்,
அத்திவெட்டி, பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.
2. மேகவண்ணன் (வயது –40/2026 )
வைரவசுந்தரம்,
அத்திவெட்டி, மதுக்கூர்,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.
3. வைரவசுந்தரம் (வயது –63/2026 )
த/பெ. வைத்தியலிங்கம்,
அத்திவெட்டி, மதுக்கூர்,
பட்டுக்கோட்டை தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம்.

.... எதிரிகள்

**<u>வழக்கு சுருக்கம்</u>**

| வ.எண் | விவரங்கள் | விளக்கம் |
|---|---|---|
| 1) | வழக்கு எண் | 22/2026 |
| 2) | காவல் நிலையம் மற்றும் குற்ற எண் | மதுக்கூர் காவல் நிலையம்,<br>412/2025 |
| 3) | எதிரியின் பெயர், தந்தை பெயர் மற்றும் வயது, தொழில், முகவரி, | 1. சசிக்குமார் (வயது –48/2026 )<br>த/பெ. சிதம்பரம்,<br>அத்திவெட்டி, பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br>2. மேகவண்ணன் (வயது –40/2026 )<br>த/பெ. வைரவசுந்தரம், |

| | | |
|---|---|---|
| | | அத்திவெட்டி, மதுக்கூர்,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம்.<br>3. வைரவசுந்தரம் (வயது –63/2026 )<br>த/பெ. வைத்தியலிங்கம்,<br>அத்திவெட்டி, மதுக்கூர்,<br>பட்டுக்கோட்டை தாலுக்கா,<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| 4) | சம்பவம் நடைபெற்ற நாள் | 09.11.2025 |
| 5) | புகார் அளித்த நாள் | 10.11.2025 |
| 6) | கைது செய்த நாள் | AB<br>AB<br>AB |
| 7) | பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | 14.11.2025<br>14.11.2025<br>14.11.2025 |
| 8) | அமர்வு நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்கு அனுப்பிய தேதி | – |
| 9) | விசாரணை தொடங்கிய தேதி | 11.02.2026 |
| 10) | விசாரணை முடிவுற்ற தேதி | 26.02.2026 |
| 11) | தீர்ப்பு அல்லது உத்தரவு | இறுதியாக, மேலே விவாதித்த வகையில் 1முதல் 3 எதிரிகளுக்கு எதிராக இதச பிரிவுகள் இதச கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கபடவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளுக்கு எதிரான 296(b), 351(2) BNSன் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுகிறது. |

| | | |
|---|---|---|
| | | 1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக பிரிவு 115(2),BNS கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்து 271(2) BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. |
| 12) | தீர்ப்பின் நகல் எதிரிக்கு வழங்குதல் | ஆம் |
| 13) | காலதமதத்திற்கான காரணம் | குற்றப்பத்திரிக்கை 08.01.2026 –ம் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.08.01.2026ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இவ்வழக்கீன் தீர்ப்புரை 07.03.2026 ம் தேதி அன்று திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது. |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 08.01.2026–ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் இன்றையதினம் 08.01.2026–ம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, குற்றமுறையிடுபவர் தரப்பில் திரு.j.சரவணகுமார்., எம்.ஏ.பி.எல்., அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 அவர்களும், எதிரிகள் தரப்பில்.,திரு. பழனிவேல்., பி.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும் வழக்கு ஆவணங்கள், சாட்சியங்கள் அனைத்தும் பரிசீலனை செய்து இன்று வழங்கும்,

## தீர்ப்புரை

**1. குற்றப் பத்திரிக்கையில் குறிப்பிட்டுள்ள அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

குற்றமுறையீடுபவரால் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பிரிவுகள் 296(b), 115(2),351(2) BNSன் கீழும், குற்றத்திற்காக எதிரிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது :–**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் இதர வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழப்பாணை அனுப்பட்டுள்ளது. எதிரி அழைப்பாணையின் பேரில் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவருக்கு வழக்கு அவணங்களின் சட்டப் பிரிவு 230 BNSSன் கீழ் இலவசமாக நகல் வழங்கப்பட்டது.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரிக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு, இரு தரப்பும் கேட்கப்பட்டு தகுந்த ஆதாரங்கள் மற்றும் நம்புவதற்கு காரணங்கள் இருப்பதனால் எதிரி மீது 296(b), 115(2),351(2) BNSன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, குற்றவியல் விசாரணை நடைமுறை சட்டம் பிரிவு 263 BNSS ன் கீழ் எதிரிக்கு எடுத்துரைத்து வினவியபோது எதிரி பொய் வழக்கு என்றும், அவர் குற்றவாளிகள் என்றும், தெரிவித்தார். எனவே, வழக்கானது அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

இவ்வழக்கின் குற்றம் சாட்டப்பட்ட சசிக்குமார்,மேகவண்ணன் மற்றும் வைரவசுந்தரம் என்பவர்கள் வாதி அத்திவெட்டி அரசு மேல்நிலைப்பள்ளி பாலம் அருகில் நின்று கொண்டு இருந்த போது அசிங்கமான வார்த்தைகளால் பேசியும், கால்லால் எட்டி உதைத்தும், முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தியும், வாதியையும் அவரது மனைவியையும் கொலை செய்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவும், இச்சம்பவம் தொடர்பாக மேற்படி கண்ணன் என்பவர் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மதுக்கூர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை பெற்று மதுக்கூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதனை புலன் விசாரணைக்கு வைக்கப்பட்டது. பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடத்தை பார்வை இட்டு சாட்சிகளை விசாரித்து, குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மேற்படி பிரிவுகளின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

கடந்த 09.11.2025ந் தேதி காலை 07.30 மணிக்கு வாதியையும் அவரது மனைவியையும் அத்திவெட்டி அரசு மேல்நிலைப்பள்ளி பாலம் அருகில் நின்று பேசிக்கொண்டிருந்த போது எதிரிகள் அசிங்கமான வார்த்தைகளால் பேசி குற்றத்திற்காவும், எதிரிகள் கைகளால் முகத்தில் அடித்தும், கால்களால் எட்டி உதைத்தும், வாதியானவர் POST OFFICE அருகில் வந்த பொழுது அங்கு வந்த 2,3 எதிரிகள் முதுகில் அடித்து காயத்தை ஏற்படுத்தியதற்காகவும், எதிரிகள் தென்னந்தோப்பில் அருவாளை காண்பித்து வாதியையும் அவரது மனைவியையும் கொலை செய்து விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காகவும், 296(b),115(2),351(2) BNS ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அசா.1, அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளன. அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு சான்று பொருள் ஏதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசா.ஆ.1 அரசு தரப்பு வழக்கிற்கும், கு.வி.மு.ச. பிரிவு 161(3) ன் படியான வாக்குமூலத்திற்கும், ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார்.

**6. அரசு தரப்பு சாட்சியங்களின் சாட்சிய சுருக்கம்:**

அ.சா.1 திரு.கண்ணன் புகார்தாரர் தனது சாட்சியத்தில், கடந்த 09.11.2025ம் காலை 07.00 மணிக்கு நானும் என் மனைவியும் ஆட்களை வைத்து என் மாமியார் தோப்பில் தேங்காய் வெட்டினோம். அங்கு வந்த எதிரிகள் எங்களை பார்த்து யாரை கேட்டு வெட்டுகிறாய் என்று எங்களுக்கும் ராதாவுக்கும் இடப்பிரச்சனை உள்ள போது அதை தீர்க்காமல் எப்படி வெட்டலாம் என்று அரிவாளை காட்டி மிரட்டினார்கள். நாங்கள் தேங்காய் வெட்டுவதை நிறுத்தி விட்டு கிளம்பிவிட்டோம். பின்பு, சுமார் 12.30 மணியளவில் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் நின்ற போது சசிக்குமார் என்னை தகாத வார்த்தையால் திட்டி என் முகத்தில் இடது கண் அருகில் என் தலையின் பின் பகுதியில் அடித்தார். அங்கிருந்து சிறிது துாரத்தில் வைரசுந்தரம் மற்றும் மேகவண்ணன் இருவரும் என் இடுப்பிலும் முதுகிலும், கையால் அடித்தார்கள். அதில் எனக்கு இடது தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது. என் மனைவி என்னை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார். அங்கு மதுக்கூர் போலிசார் வந்து விசாரித்த போது புகார்

வாக்குமூலம் அ.சாஆ.1 கொடுத்தேன்.

அ.சா.2 திரு.இளங்கோ உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில், ப.சா.8 ராஜாகோபால் அவர்க்காவும் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 09.11.2025 ந் தேதி ராஜாகோபால் நிலைய பொறுப்பில் இருந்த போது கிடைத்த தகவலை பெற்று பட்டுக்கோட்டை GH க்கு சிகிச்சை பெற்ற அ.சா1 கண்ணன் என்பவர் கொடுத்த மனு எண்.716/2025, கொடுத்து, விசாரணைக்கு பின் குற்ற எண். 412/2025, சட்டப்பிரிவு 296 (பி),115(2),351(2) BNS ன்படி முதல் தகவல் அறிக்கை (அசா.ஆ.3) ஆக பதிவு செய்துள்ளார். பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 11.11.2025–ந் தேதி காலை 07.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலை சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் அசா.ஆ.3 மற்றும் மாதிரி வரைபடம் அசா.ஆ. 4 ஆக தயார் செய்து வாக்குமூலம் பெற்றேன். சம்பவ சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்கு மூலம் பதிவு செய்தேன். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இரு நபர் ஜாமீன் பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அ.சா.1க்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேட்டு நகல் (அ.சா.ஆ.5) பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம் பட்ட நபர் சொல்லாமல் சென்றுவிட்டதால் Opinion கொடுக்க முடியாது என்று மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். பின்னர் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 296 (பி),115(2),351(2) BNS வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான அம்சங்களை தொகுத்து 351(1)(b) BNSS–ன்வினவிய போது குற்றம் சாட்டப்பவர் அவற்றை பொய் சாட்சியம் என மறுத்தார். குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகள் முன்நிறுத்தப்படவில்லை.

**7. தீர்வு:–**

இந்த வழக்கில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவெனில், எதிரிகள் மீது குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

அரசு தரப்பின் குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் ஆபசாமான வார்த்தைகளால் பேசியும், காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்று குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இருதரப்பும் கேட்கப்பட்டது, ஆவணங்களும், சாட்சிகளின் வாய்மொழி சாட்சியங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாத உரையின் போது அசா.1 சிகிச்சைக்கு சேர்ந்தார் என்பது மருத்துவர்கள் வழங்கிய அ.சா.ஆ.5 விபத்து பதிவேல் நகல் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளது என்று வாதிட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. எனவே, அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டவருகளுக்கு எதிரான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கபடவில்லை என்று வாதிட்டார்.

இந்நிலையில் அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியம் குற்றம் சாட்டப்பட்டவருகளுக்கு எதிராக வனையப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மெய்பிக்கும் வகையில் அமைந்துள்ளதா? என்று பரிசீலனை செய்வது அவசியமாகிறது. அசா.1, வழக்கு சம்பவத்தில் காயம் அடைந்த சாட்சியாக முன்னிடப்பட்டுள்ளனர்.

அ.சா.1 ன் சாட்சியத்தை பரிசோனை செய்து பார்க்கும் போது சசிக்குமார் தகாத வார்த்தையால் திட்டி முகத்தில் இடது கண் அருகில் குத்தியதாகவும், வைரசுந்தரம் மற்றும் மேகவண்ணனை இடுப்பிலும் முதுகிலும் கையால் அடித்ததில் தோள் பட்டையில் காயம் ஏற்பட்டது. தன் மனைவி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளார்.

எனவே, அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைத்து அமைந்துள்ளதா என்று கவனமுடன் பரிசீலிக்கையில் அ.சா.1 தன்னை 1 வது எதிரி சசிக்குமார் கையால் இடது கண் அருகில் குத்தியதாகவும், 2 மற்றும் 3எதிரிகள் இடுப்பிலும் முதுகிலும்

கையால் அடித்தாகவும் சொல்லியுள்ளார். அவற்றை தனது புகார்வாக்குமூலமான அ.சா.ஆ.1லும் சொல்லியுள்ளார். மேலும், முதல் தகவல் அறிக்கையான அ.சா.ஆ.2,அதே போல் எதிரி தன்னை எதிரிகள் இடப்பிரச்சனை இருக்கும் போது அதை தீர்க்காமல் தேங்காய் வெட்டலாம் என்று எதிரிகள் மூவரும் மாறி மாறி அடித்தாக சொல்லியுள்ளார். அங்கு மருத்துவரிடம் தன்னை அடையாளம் தெரிந்த இரண்டு நபர்கள் கைகளால் தாக்கியதாலும், அதில் காயம் ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார். காயம்பட்ட அ.சா.1 சொல்லாமல் சிகிச்சையில் இருந்து சென்றதால் அவருக்கு மருத்துவர் காயச்சான்றிதழ் வழங்க வில்லை என்பது தெரியவருகிறது. இருப்பினும், விபத்து பதிவேட்டு நகலில் மருத்துவரிடம் அ.சா.1 தன்னை தெரிந்த நபர்கள் தாக்கியதாக கூறியுள்ளார் என்பது மருத்துவர் விபத்து பதிவேட்டு நகல் அ.சா.ஆ.5 வழங்கியுள்ளார்.

மேலும், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.2 சாட்சியத்தில் கவனமுடன் பரிசீலிக்கையில் சிகிச்சையில் இருந்து அ.சா.1விடம் புகார் வாக்குமூலம் பெறப்பட்டு பின்பு சம்பவ இடம் சென்று பார்வை மகசர் (அ.சா.ஆ.3) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.4) பெற்றுள்ளார் என்பதும் அந்த ஆவணங்களை பரிசீலிக்கையில் அ.சா.1 நீதிமன்றத்தில் சொல்லியது போலவும் வழக்கு சம்பவ இடம் இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும், அதனையே அ.சா.1, தனது புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1 லிலும் சொல்லியுள்ளார். எனவே, மேற்படி சாட்சிகள் மற்றும் விபத்து பதிவேட்டு நகலை ஆராய்ந்து பார்க்கும் போது அ.சா.1 க்கு சிறுகாயம் ஏற்பட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமின்றி தெரியவருகிறது. அதை யார் மூலமாக ஏற்பட்டது என்று பரிசீலனை செய்து பார்க்கையில் அ.சா.1 தன்னை 1 வது எதிரி சசிக்குமார் கையால் இடது கண் அருகில் குத்தியதாகவும், 2 மற்றும் 3எதிரிகள் இடுப்பிலும் முதுகிலும் கையால் அடித்தாகவும் சொல்லியுள்ளார். எனவே, மேற்படி குற்றம் சாட்டப்பட்டவர்களால் தான் அ.சா.1க்கு காயம் ஏற்பட்டது என்பது தெரிய வருகிறது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கும், அ.சா.1க்கு இடப்பிரச்சனை இருந்து வருகிறது என்பது அவரது புகார் வாக்குமூலமான அ.சா.ஆ.1 மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஐ பரிசீலிக்கையில் தெரிய வருகிறது. மேற்படி, பிரச்சனையின்

காரணத்தினால் அ.சா.1 நடந்து சென்ற போது எதிரிகள் அ.சா.1 ஐ தாக்கியுள்ளார்கள் என்பது நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

அரசு தரப்பு வழக்கினை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பு சாட்சியான அ.சா.1 தனது சாட்சியத்தில் தெளிவாக தன்னை யார் தாக்கினார்கள் என்று கூறியுள்ளார். அதே போல் அரசு தரப்பு சான்றாவணங்களை சரியாக அமைந்துள்ளது. எனவே, இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் பொருண்மைகளை ஆராய்ந்து பார்க்கும் போது காயம் பட்ட நபரின் சாட்சி முழுமையாக நம்பும்படியாக உள்ளது. மேலும், அதுவே, அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க போதுமானதாக உள்ளது. அ.சா.1 சாட்சியை ஒத்துரைத்து மற்ற அரசு தரப்பு சாட்சிகளும் சாட்சியம் அளித்துள்ளனர். அதனை நிரூபணம் செய்யும் வகையில் மருத்துவர் அளித்த அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டு நகலில் தன்னை தெரிந்த மூன்று நபர்கள் தாக்கியதாகவும் கூறியுள்ளார் என்பதும் தெரியவருகிறது.மருத்துவர் காயம்பட்ட நபருக்கு காயச்சான்றிதழ் வழங்காவிட்டாலும், அவருக்கு ஏற்பட்ட காயத்தினை அவர் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் உள்ளது போல் சொல்லியுள்ளார். அ.சா.1ன் சாட்சியத்திற்கு ஒத்துரைத்து சான்றாவணங்கள் அமைந்துள்ளது. எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் குற்றச்சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டு நிரூபிக்க போதுமானதாக அமைந்துள்ளது.

பிரிவு 296(b) ன் கீழ் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டினை இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளின் ஆராய்ந்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தகாத வார்த்கைளால் திட்டியதாக அ.சா.1 தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளனர். ஆனால், இப்பிரிவின் கீழ் என்ன வார்த்தைகளை எதிரிகள் பயன்படுத்தினார்கள் என்று அரசு தரப்பு வழக்கிலும் மற்றும் அ.சா.1 குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், அந்த வார்த்தைகளால் மற்றவர்கள் எரிச்சல் அடைந்தார்களா என்பதை அரசு தரப்பு நிரூபிக்கும் தவறியுள்ளது. எனவே, பொதுவாக காமகுரோதமாக திட்டினார்கள் என்று கூறுவதால் மட்டுமே பிரிவு 296(b), குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருத முடியாது. M.S Madhana Gobal VS K. Lalitha 2022 live law (SC)844 என்ற வழக்கில் mere abusive humilatitive or defamative word by itself cannot attract offences u/s.294(b) IPC . There must be a further proof to establish that it was to the

annoyance of others. எனவே, குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் இச்சட்டப்பிரிவு 296(b) ன் கீழ் 1 வது எதிரி குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

பிரிவு 115(2) BNS ன் கீழான குற்றச்சாட்டை இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளுடன் ஆராய்ந்து பார்க்கும் போது எதிரிகள் மூவரும் அ.சா.1 ஐ கையால் அடித்து அ.சா.1க்கு சிறுகாயம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை எதிரிகளுக்கு எதிராக அ.சா.1ன் சாட்சியின் மூலமும் அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டு நகலின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

பிரிவு 351(2) BNSன் கீழான குற்றச்சாட்டை இவ்வழக்கின் பொருண்மை மற்றும் சூழ்நிலைகளுடன் ஆராய்ந்து பார்க்கும் போது குற்றம் சாட்டப்பட்ட 1 முதல் 3 நபர்கள் அசா.1 ஐ கொலை மிரட்டல் விடுத்தாக அரசு தரப்பில் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். மேற்படி, குற்றச்சாட்டினை நிரூபணம் செய்யும் வகையில் அரசு தரப்பில் சாட்சிகள் விடப்பட்டதா பரிசீலனை செய்து பார்க்கையில் அ.சா.1 ன் தனது சாட்சியத்தில் அ.சா.1 ஐ குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் அரிவாளை காட்டி மிரட்டி விட்டு சென்றதாக சொல்லியுள்ளனர். அதனால் அ.சா.1 தனக்கு பயம் ஏற்பட்டதாகவோ, தங்கள் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதகாவோ எந்த இடத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேலும், 351(2) BNSஇதச வின் கீழ் குற்றத்தினை நிரூபிக்க சம்பவத்திற்கு முன்பே எதிரிகள் ஒன்றினைந்து பொது எண்ணத்துடன் குற்றத்தை செய்ய ஆலோசனை செய்திருக்க வேண்டும்.ஆனால் இவ்வழக்கில் புகார்தாரர் மற்றும் எதிரிகள் தென்னந்தோப்பில் தேங்காய் பரிக்கும் போது பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே, எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு 351(2) BNS ன் கீழான குற்றச்சட்டிற்கு Common intention 1 முதல் 3 எதிரிகளுக்குள் ஏற்பட்டதாக அரசு தரப்பு நிரூபிக்கவில்லை.எனவே, இப்பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளை நிரூபிக்க அரசு தரப்பு தவறியுள்ளது. எனவே, இச்சட்டப்பிரிவின் கீழ் எதிரிகளுக்கு எதிராக பிரிவு 351(2) BNS ன் கீழான குற்றச்சாட்டு கீழ் எதிரிகள் 1 முதல் 3 குற்றவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>8) முடிவு :</u>**

i) இறுதியாக, மேலே விவாதித்த வகையில் 1முதல் 3 எதிரிகளுக்கு எதிராக 296(b), 351(2) BNSன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபிக்கபடவில்லை என்று தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளுக்கு எதிரான 296(b), 351(2) BNSன் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து 271(1) BNSS ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிடுகிறது.

1 முதல் 3 எதிரிகளுக்கு எதிராக பிரிவு 115(2) BNS கீழ் குற்றவாளிகள் என்று முடிவு செய்து 271(2) BNSS ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

எதிரிகளுக்கு வழங்கப்பட இருக்கும் தண்டனை குறித்து எதிரிகளிடம் வினவிய போது

1 முதல் 3 எதிரிகள் **"நாங்கள் தெரியாமல் செய்துவிட்டோம். இனிமேல் சண்டை போடமாட்டோம். ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்கள். எங்களை மன்னித்து விடுதலை செய்யவேண்டும்"** என்று கூறினார்கள்.

1 முதல் 3 எதிரிகள் மீது வனையப்பட்ட 115(2) BNS ன் கீழான குற்றத்திற்கு 1 முதல் 3 வரையான எதிரிகளுக்கு ரூ. 5,000/– அபராதமும் விதித்து அதைக் கட்டத் தவறும் பட்டச்சத்தில் ஒவ்வொரு குற்றவாளிகளுக்கும், ஒரு மாத மெய் காவல் சிறைத்தண்டணை விதித்து தீர்ப்பளிக்கிறது. 1 முதல் 3 எதிரிகள் பிரிவு 115(2) BNS ன் கீழ் குற்றவாளிகள் என்று ச/பி. 271(2) BNSS ன் கீழ் தீர்மானிக்கிறது.

மொத்தம் அபராதம் ரூ. 15,000/–.

ii) இந்த வழக்கின் தடயப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

iii) இவ்வழக்கில் எதிரிகள் எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன் கிழமை ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

SUDHARSAN T
Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:54:13 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கண்ணன் |
| அ.சா.2 | திரு.இளங்கோ (உதவி ஆய்வாளர்) |

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>

| | |
|---|---|
| அ.சாஆ1 | 10.11.2025ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம் |
| அ.சாஆ.2 | 10.11.2025ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| அ.சாஆ.3 | 10.11.2025ம் முதல் பார்வை மகசர் |
| அ.சாஆ.4 | 10.11.2025ம் தேதியிட்ட மாதிரி வரைபடம் |
| அ.சாஆ.5 | 10.11.2025ம் தேதியிட்ட விபத்து பதிவேடு |

<u>அரசு தரப்பு சான்றுபொருள்–</u> இல்லை

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுப் பொருட்கள்</u> – இல்லை

SUDHARSAN T
Digitally signed by SUDHARSAN T
Date: 2026.03.11 17:54:19 +0530

நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.